## ஹாரிஸ்பத்துவ பிரதேச சபை

## கண்டி மாவட்டம்

-------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 28 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 28 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 09 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

-------------------

நிதிக் கூற்றுக்களின் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஹாரிஸ்பத்துவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகள் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

-------------------------------------

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது ரூபா 95,216 செலவிடப்பட்டு நிர்மானிக்கப்பட்டிருந்த யடி/ உடகம பல் செயற்பாடு கட்டடத்தின் பெறுமதியினை மூலதன படுத்தாமையால் கட்டிடக் கணக்கு மற்றும் மூலதன ஈடுபடுத்தலில் வருமானத்தின் பங்களிப்பு கணக்கு அப்பெறுமதியால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான கழிவுப் பொருள் வரி வருமானம் ரூபா 309,000 இனை ரூபா 321,000 தொகை என கணக்கீடு செய்யப்பட்டிந்தமையால் கழிவுப் பொருள் வரி வருமானம் ரூபா 12,000 மிகையாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

1.3.2 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

---------------------------------------------------------------------------------

(அ) பெறவேண்டிய கணக்குகள்

-------------------------------------------

2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 15,013,408 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் 01 வருட காலத்தை விஞ்சியிருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,731,532 ஆகும்.

(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

------------------------------------------------

2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 9,183,412 இற்கான செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளில் 01 வருட காலத்தை விஞ்சிய மீதிகளின் கூட்டு பெறுமதி ரூபா 1,323,780 ஆக காணப்பட்டது.

2 நிதி மீளாய்வு

--------------------

2.1 நிதி விளைவுகள்

-------------------------

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 14,307,986 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் போது மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 18,282,595 ஆக காணப்பட்டமையால், நிதி விளைவுகளில் ரூபா 3,974,609 இற்கான வீழ்ச்சியொன்று காணப்பட்டது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

--------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான சம்பள மீளளிப்பு தொகையென ரூபா 14,656,123 கிடைத்திருந்த போதும் சம்பளங்கள் மற்றும் படிகள் ரூபா 19,080,657 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இதன் பிகாரம், சபையின் வருமாணத்தில் ரூபா 4,424,534 இற்கான தொகையொன்று சபை ஊழியர்களின் சம்பளம் செலுத்துவதற்காக செலவிடப்பட்டிருந்தது. அத்தொகை சம்பள மிகையளிப்பு தவிற சபையின் மீண்டுவரும் வருமாணத்தில் நூற்றுக்கு 14.34 ஆக காணப்பட்டது.

2.3 தொழிற்பாட்டு மூலதன முகாமைத்துவம்

---------------------------------------------------------

மொத்த நடைமுறை சொததுக்களுடன் நடைமுறைப் பொறுப்புக்களை காட்டும் வகிதாசாரம் 3.35:1 ஆக காணக்கபட்டதுடன் முன்னைய ஆணடின் விகிதாசாரம் 2.58.:1 உச்ச மட்டத்தில் காணப்பட்டது. மேலும் ஒட்டு மொத்த நடைமுறை சொத்துக்களில் நூற்றுக்கு 43 எனப்படும் ரூபா 15 மில்லியன்கள் நிர்மான வேலைகள் மற்றும் பலவின கடன் பட்டோராக காணப்பட்டதுடன், மொத்த நடைமுறை பொறுப்புக்களில் நூற்றுக்கு 89 எனப்படும் ரூபா 9.1 மில்லியன் நிர்மான வேலை மற்றும் பலவின கடன் கொடுத்தோர் அடங்கியிருந்தனர்.

2.4 வருமான நிர்வாகம்

-----------------------------

2.4.1 செலுத்துகை டவர் வர்த்தக வரி

-----------------------------------------------

பிரதேச சபை அதிகார பிரதேசத்தில் 18 செலுத்துகை டவர்கள் நிறுவப்பட்டிருந்தன அத்துடன் டவர்களின் மூலம் வர்த்தக வரி அறவிடப்படாமையால், சபைக்கு 2013 ஆண்டின் போது ரூபா 13,200 இற்கான தொகையொன்யின் இழந்துள்ளது.

2.4.2 முத்திரை கட்டணம்

------------------------------

மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அலுவலா்களிடம் 2013 திசெம்பா் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டனங்களின் பெறுமதி ரூபா 3,000,000 ஆக காணப்பட்டது. அவற்றில் 2014 ஜூலை 14 திகதியில் உள்ளவாறு ரூபா 800,972 தொகையொன்று மேலும் கிடைக்க வேண்டியிருந்தது.

2.4.3 சுற்றாடல் அனுமதிப் பத்திரக் கட்டணம்

-----------------------------------------------------------

1988 இன் இலக்கம் 56 மற்றும் 2000 இன் இலக்கம் 53 கொண்ட சட்டங்களின் மூலம் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சார் சட்டம் மற்றும் அதன் கீழ் விதிக்கப்பட்ட பிரமாணங்களுக்கு இணங்க 2008 ஜனவரி 25 திகதிய 1533/16 இலக்கம் கொண்ட அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் 06 செயற்திட்டங்கள் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளாமையால் ரூபா 46,200 இற்கான வருமானம் ஒன்று சபைக்கு இழக்க நேரிட்டுள்ளது.

3. செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------

3.1 முகாமைத்துவ திறமையின்மை

----------------------------------------------

மெதவெல , தொம்பரலாவ பாதையில் சுமார் 4 ஏக்கர் காணி சபையின் அங்கிகாரம் இன்றி துண்டுகளாக பங்கீடு செய்யப்பட்டிருந்தது. அவற்றில் 02 துண்டுகள் விற்பனை செய்யப்பட்டிருந்தது. அத்துடன் இந்தக் காணியின் இடது பக்கத்தில் சுமார் 20 மீற்றர்கள் அரைச்சுவரும், வலது பக்கத்தில் 02 பாதைகளும் அங்கீகாரம் இன்றி நிர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் இந்த சபை அங்கீகாரமற்ற நிர்மான வேலைகள் மற்றும் அங்கீகாரமற்ற காணி விற்பனவு வர்த்தக மொன்று நடத்துவது தொடர்பாக நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை.

3.2 பயன்படுத்தப்படாத மற்றும் குறைபாட்டுச் சொத்துக்கள்

-------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 312,028 இற்கான பெறுமதியுடைய 04 சொத்து விடயங்கள் 03 வருடங்களை விட மேற்பட்ட காலம் முதல் பயன்யடுத்தப்படாமல் மற்றும் குறைபயன்பாட்டுடன் காணப்பட்டது.

3.3 ஒப்பந்த நிர்வாகம்

-------------------------

இடைத் தொடர்பு கொங்கீரிட் கற்கள் பரப்புதல் தொடர்பாக தயாரிக்கப்ட்டிருந்த மதிப்பிட்டில் வேலை விடய இலக்கம் 2.2 பந்தியில் கீழ் கொங்கிட் அரைச்சுவர் 9 அங்குல உயரத்தில் கட்டுவதற்காக மதிப்பீடு தயாரிக்கட்டு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட 07 நிர்மான வேலைகளில் கொங்ரீட் அரைச் சுவர் 4 அங்குல சாதாரண உயரத்தில் அந்த மதிப்பிட்டு நியமங்களுக்கு மாற்றமாக நிர்மானிக்கப்பட்டு, அதே அளவுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது.

4. கணக்கு நடவடிக்கை தன்மை மற்றும் நல்லாட்சி

---------------------------------------------------------------------------

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம், மதிப்பீட்டு வருமாணம் மற்றும் செலவுகள், உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவுகளுடம் ஒப்பீடு செய்யும் போது 06 வருமான விடங்கள் நூற்றிற்கு 13 முதல் நூற்றுக்கு 57 வரையும் , 07 செலவு விடயங்கள் நூற்றுக்கு 9 முதல் 100 வரையும், முரண் ஒன்று அவதானிக்கப்பட்டமையானது பாதீடு பயன்தறு கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

5 முறைமைகள் மற்றும் கட்டுபாடுகள்

----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பில் விஷேட கவனம் தேவைப்படுகின்றன.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) ஒப்பந்த நிருவாகம்